

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.10.2023) முகாம் அலுவலகத்தில், பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி சந்தித்து, தனது மகள் டாக்டர் தாரணி - டாக்டர் பரத் கௌசிக் ஆகியோரது திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் இரு வீட்டாரின் குடும்பத்தினர் உள்ளனர்.

### கங்கவல்லி தொகுதி - வேப்படி பாலக்காடு கிராமத்தில்

# தார்ச் சாலை அமைக்க நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தகவல்!



சென்னை, அக். 14-

சட்டப் பேரவையில் கேள்வி - நேரம் பகுதியில் கங்கவல்லி தொகுதி உறுப்பினர் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அளித்த பதிலும் வருமாறு:-

**அ.நல்லதம்பி:** கங்கவல்லி தொகுதி, வேப்படி பாலக்காடு கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ்:** முதலமைச்சர் அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விளிம்பு மக்கள்மீது மிகுந்த அக்கறைக் கொண்டுள்ளார் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கும் வகையில் 4.10.2023 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் அரசுப் பள்ளி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/ மாணவிகளுக்கு, தற்போது மாணவர் ஒருவருக்கு மாதந்தேறும் உணவுக்காக வழங்கப்பட்டு வரும் தொகை ரூபாய் 1,000லிருந்து ரூபாய் 1,400 ஆகவும், அரசுக் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ/மாணவிகளுக்கு ரூபாய் 1,100லிருந்து ரூபாய் 1,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். ஆதி திராவிடர் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர் தங்கும் விடுதிகளை பழுது நீக்கம் செய்து சீரமைக்கச் சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும். பழங்குடியினர் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகளை அமைக்கும் பணிகளை துரிதப்படுத்த தேவையான அனுமதிகளை வழங்க தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு வழிக்காட்டுக்குழு அமைக்கப்படும் என்று மூன்று அறிவிப்புகளைச் செய்திருக்கிறார். இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், கங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், பச்சைமலை ஊராட்சி, வேப்படி பாலக்காடு குக்கிராமம் முதல் நல்லமாத்தி குக்கிராமம் வரை 8.309 கிலோ மீட்டர் ஆகும். இந்த 8.309 கிலோ மீட்டர் சாலையானது தற்போது மண் சாலையாக உள்ளது. மேலும் இதற்கான இடம் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போதைய நடைமுறையின்படி வனத் துறையின்கீழ் உள்ள நிலத்தில் சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு வனத் துறையிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, உரிய விதிகளின்படி தடையின்மைச் சான்று பெற்று, தார்சாலையாக மாற்ற நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்

**அ. நல்லதம்பி:** கங்கவல்லி தொகுதி, பச்சமலை ஊராட்சி, வேப்படி பாலக்கோடு SC/ST மக்கள் வாழக்கூடிய கிராமம் ஆகும். இவர்கள் பச்சைமலைக்கு சென்று வருவதால் 50 கிலோ மீட்டர் தூரம் திருச்சி மாவட்டம், சோபனாபுரம் வழியாக சுற்றி வரவேண்டும். ஆகவே, வேப்படி பாலக்காடு முதல் நல்லமாத்திவரை 8.3கிலோ மீட்டர் தூரம் தார்சாலை அமைத்துக்கொடுத்தால் இவர்கள் சிரமமில்லாமல் பச்சைமலைக்கு மேலே சென்று வருவார்கள். ஆகவே, இந்தத் தார்சாலையை அமைத்துக்கொடுத்தால் அந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கேட்டு, இந்தத் தார்சாலையை அமைத்துக்கொடுக்குமாறு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ்:** வன உரிமைச் சட்டம் 2006ன்படி வனப் பகுதியில் வாழும் மக்களுக்கு சாலை வசதி ஏற்படுத்திட அதிகப்பட்சமாக ஒரு ஹெக்டருக்குள் நிலம் தேவைப்பட்டு, அதிகப்பட்சமாக 75 மரங்கள் வரை அகற்றப்படவேண்டியிருப்பின் கோட்ட வன அலுவலரின் அனுமதியுடன் வனத் துறையிட மிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டாலோ அல்லது ஒரு ஹெக்டருக்கும் அதிகமான நிலத்தேவை மற்றும் 75 மரங்களுக்கு மேல் அகற்றவேண்டியிருப்பின் சுற்றுச்சூழல் துறையின் அனுமதியுடன் வனத் துறையின்மூலம் முன்மொழிவுகள் பெறப்பட்டாலோ, பணிகள் மேற்கொள்ள பரிசீலனைச் செய்யப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள பகுதியானது கங்கவல்லி வனச் சரகத்திற்குட்பட்ட வேப்படி பாலக்காடு முதல் நல்லமாத்தி வரையுள்ள பாதையை தார்சாலையாக மாற்றுவது குறித்து, DRDA மூலம் survey எடுக்கப்பட்டதில் சாலை அமைப்பதற்கு தேவையான வனப்பகுதி ஒரு ஹெக்டருக்குமேல் இருப்பதாலும், 75 மரங்களுக்குமேல் அகற்றவேண்டியிருப்பதாலும் ஒன்றிய அரசின் PARIVESH portal இணையதளத்தில் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ஆத்தூர் வனக் கோட்ட அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் ஒன்றிய அரசிடமிருந்து அனுமதிப் பெறப்பட்டு, முன்மொழிவுகள் பழங்குடியினர் நலத் துறையால் பெறப்படும்பட்சத்தில் சாலைகள் போட பரிசீலனை செய்யப்படும்.

**அ. நல்லதம்பி:** பச்சைமலையில் மேலே வாழக்கூடிய மக்கள், கீழே கெங்கவல்லி தாலூகாவில் இருக்கும் தாலுகா அலுவலகத்திற்கும், Union officeக்கும், அவர்களுக்குத் தேவையான சலுகைகளைப் பெற வேண்டுமென்றால், திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் வழியாகச் சென்று தம்மம்பட்டி வழியாக வருவதால் சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்துதான் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். ஆகவே, அவர்கள் மிகவும் சிரமப்படுவதால், மாயம்பாடியிலிருந்து 95பேளூர், கூடமலை வழியே கெங்கவல்லி தாலுகா அலுவலகம் வரை 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார்ச்சாலை அமைத்துத் தருமாறு, பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ்:** உறுப்பினர் கோரியுள்ளபடி பழங்குடியினர் நலத் துறைமூலம் சாலைகள் அமைக்கும் போது வனத் துறை அனுமதி, சுற்றுச்சூழல் அனுமதி இவையெல்லாம் பெற்றுத் தான் அமைக்க முடியும். அதுமட்டுமல்லாமல், ஒன்றிய அரசின் PARIVESH portal மூலம்தான் ஒரு ஹெக்டேருக்குமேல் மரங்கள் வெட்ட அனுமதி பெறப்பட்டு, அதன்பிறகுதான் அத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும். உறுப்பினர் 15 கிலோ மீட்டர் தொலைவிற்கு தார்ச்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதனைக் கவனத்துடன் பரிசீலித்து, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி அடிப்படையில் பரிசீலிக்கப்படும்

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

# அண்ணாவின் அன்புத் தம்பி; அஞ்சாத ஆசைத் தம்பி!

அண்ணாவின் தம்பிகள்
ஆயிரம் ஆயிரம்
எண்ணிலா இளைஞர்கள்;
இலட்சிய ஈட்டிகள்!
விண்மீன்கள் நெருங்கிய
விரிவானில் விளங்குதல்போல்
கண்முன்னே விரிந்திடக்
கழகந்தான் வளர்ந்திடத்
திண்மையாய் எழுந்தோருள்
சிகரமாய்த் திகழ்ந்தவர்;
கண்ணாகக் கழகத்தைக்
கருதிய பாசத்தம்பி
நண்ணியே என்னுடன்
நடந்தவர் என் நல்லதம்பி!
அண்ணாவே பாராட்டி
அகமகிழ் அறிவுத்தம்பி;
அண்ணாவின் நெஞ்சிலே
அமர்ந்தவோர் ஆசைத்தம்பி!

வண்மையை நாடாமல்
வழுவியும் ஓடாமல்
உண்மையாய் இறுதிவரை
உரிமையோடு இருந்தவர்!
தொண்டராய்த் தோழராய்,
துணையெனத் தலைவராய்
மண்டிலம் எங்குமே
மாண்புற வளர்ந்தவர்
கண்டிலம் இவர்போலக்
கடமை,கண் ஆனவர்!

கருத்துள்ள நூலொன்று
"காந்தியார் சாந்தியடைய",
பொருத்தமாய் எழுதிடப்
புரட்சிநூல் என்றரசு
கருதியதால் ஆறுமாதக்
கடுங்காவல் விதித்ததுடன்
நெருக்கமாய் இருந்தமுடி
நீக்கியே மொட்டைபோட்டு
வருத்திடினும் கொள்கைத்தேர்
வலமாக எழுந்தவர்!

தனிநாடு கோரிக்கை
தழைத்திருந்த காலத்தில்
நனிஎழுச்சி மிகுந்திருந்த
அண்ணாவின் நாள்களிலே
தனியரசு நாளிதழ்
தயங்காமல் நடத்தியவர்!
முனைப்புடன் எழுதியவர்;
முப்போதும் விடுதலை
நினைப்போடு இயங்கியவர்;
நெருப்பாக முழங்கியவர்!
தனைத்தலைவர் எனக்கருதித்
தனிக்கட்சி தொடங்கியவர்
எனைத்தொன்றும்
செய்யத்தான்
இயலாதென்று அறிந்தனால்
தினையளவும்
தடுமாற்றம் தீண்டாமல்
திகழ்ந்தவர்;



கனவிலும் அண்ணாதான்
கழகமெனத் திளைத்தவர்!

வேலாகப் பாய்ந்தவர்;
வீணரைக் காய்ந்தவர்;
பாலினை ஒத்தவர்;
பட்டதை உரைத்தவர்
நூலினை எழுதியதால்
சிறையிலே நோற்றவர்;
ஆல்போன்ற கழகத்தின்
அகலாத விழுதவர்;
கோலேந்தி ஆள்வதற்குக்
கொள்கைவயல் உழுதவர்!
சாலவே மாந்தர்க்குத்
தன்மானம் பகுத்தறிவு
கோலமெனப் பெரியார்போல்
கொள்கையைப் பொழிந்தவர்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

கலைஞரின் தோழரென்ற
காரணத்தால் மிசாவெனும்
கொலைகாரச் சட்டத்தின்
கொடுங்குகைப் பட்டவர்;
வலையுற்ற சிங்கத்தை
வணங்காத செம்மலை
சிலநாளா? ஓராண்டு
சிறையிலே இட்டனர்!
உலையாகக் கொதித்திடும்
உள்ளந்தான்; கழகத்தை
இலையென ஆக்குதற்கு
இழைத்தபல கொடுமைகளை
மலைபோல நின்றெதிர்த்த
மறவருள் ஒருவராய்த்
தலைநிமிர்ந்து நின்றவர்;
தன்மானக் குன்றவர்;
குலையாமல் திகழ்ந்தவர்;
கொள்கையில் முகிழ்த்தவர்!

குறையெதிர்த்துப் போராடிக்
குண்டுதடி கண்டவர்க்குச்
சிறைச்சாலை மலர்க்கூட்டச்
சித்திரச் சோலையன்றோ!

அஞ்சாத தம்பியாய்
அண்ணாவோ டிருந்தவர்;
நெஞ்சுரமாய் முதல்தேர்தல்
நின்றுவெற்றி பெற்றவர்!
எஞ்சிய தேர்தலிலும்
வெற்றியே எட்டியவர்;
விஞ்சியே நாடாளு
மன்றமும் வென்றவர்;
துஞ்சியது அந்தமானில்
துயரினும் துயரன்றோ!
வஞ்சகம் கூற்றுவன்
வலிந்தங்குப் பறித்தது,
கொஞ்சமும் ஏற்கத்தான்
கூடாத வினையன்றோ!
பிஞ்சாகிக் காயாகிப்
பெருங்கனி ஆகுமுன்னே
நஞ்சகம் ஆனதன்றோ!
நல்லுயிர் போனதன்றோ!
நெஞ்சகம் அவர்தொண்டு
நினையாமல் போகுமோ?
எஞ்சிடும் காலமெல்லாம்
இல்லாமல் ஆகுமோ?
மஞ்சுசூழ் வையத்தில்
மணந்தென்றும் நீளுமே!

வெண்தாடிப் பெரியார்போல்
வெளிப்படையாய்ப்
பேசியதால்
வண்ணமாய் அழைத்தனர்
வாலிபப் பெரியார்என்று!
எண்ணத்தில் பகுத்தறிவு
இயங்கலில் தன்மானம்
மண்விட்டுப் போகுமட்டும்
வாழ்விலே கொண்டவர்!
விண்தொடும் புகழோடு
விளங்குகின்ற நூறாவது
எண்தொடும் பிறந்தநாள்
இலட்சியம் சிறந்தநாள்
வண்டூதும் மலர்களை
வாரிவாரித் தூவியே
கொண்டாடிப் போற்றுவோம்!
கொள்கைமகன் ஏற்றுவோம்!

பழமையை மறவாத
பண்புயர் தளபதியார்!
உழைத்தோரின் தொண்டினை
உயர்த்துகிற தலைவரவர்!
இழையான தொண்டரை
ஏற்றுகிற முதல்வரவர்!
இழப்பினுக்கு ஆளாகி
இடர்ப்பட்டும்
துயர்ப்பட்டும்
உழன்றசிறை வயப்பட்டும்
உருக்குலையா உறுதியுடன்
எழுந்தவர் ஆசைத்தம்பி
என்றவரின் நூற்றாண்டு
விழைவுடன் கொண்டாடும்
விழாவிங்கு வாழ்கவே!
மழையாகப் பெருகியுயர்
மாப்புகழ் வளர்கவே!

### உத்திரமேரூர் தொகுதியில் 2.60 கோடி மதிப்பில் பாலம் க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

காஞ்சிபுரம், அக். 14 -

உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத்__ அவளூர். பாலாற்று தரைப் பாலம் ரூபாய் 2 கோடி 60 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம் எல் ஏ. அர்ப்பணித்தார்.

இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் ஆர் கே தேவேந்திரன், மலர்க் கொடி குமார் . துணைப் பெருந்தலைவர்கள் பி சேகர், திவ்யப்ரியா இளமது. பேரூராட்சி மன்ற தலைவர் டபிள்யு, இ எஸ் இல்லாமல்லி குமணன். பேரூர்க் கழகச் செயலாளர் வாலாஜபாத் என்.பாண்டியன் உள்ளிட்ட ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

# வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர், தலைமை தணிக்கை குழு உறுப்பினர் தி.அ.முகமதுசகி தலைமையில் 16.10.2023 திங்கட்கிழமை மாலை 04.00 மணியளவில் புதிய பேருந்து நிலையம் பின்புறம், காட்பாடி சாலையில் அமைந்துள்ள ஹோட்டல் அனுகுலாஸ் ரெசிடென்சியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கபட உள்ளது. எனவே வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க.விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி வாரியாக BLA 2 உள்ளூர் பொறுப்பாளர்கள் ஆகியோர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: திருவண்ணாமலையில் நடைபெற உள்ள BLA 2 பயிற்சி கூட்டத்தில் 5 தொகுதிக்கு உட்பட்ட BLA 2 நிர்வாகிகள் கலந்து கொள்ளுதல், BLA 2 , BLC பட்டியல் சரிபார்த்தல், கழக ஆக்கப் பணிகள்

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ**
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.

### வரிப்பகிர்வில் -

# தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம்!



தீக்கதிர்
2023 அக்டோபர் 13 வெள்ளிக்கிழமை
வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு

சென்னை, அக். 14-

வரி பகிர்வில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்று தீக்கதிர் நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:-

வரிப் பகிர்வில் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு எந்தெந்த வகையில் வஞ்சிக்கிறது என்று மாநில நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வெளி யிட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சியளிப்ப தாக உள்ளன.

தமிழக சட்டப் பேரவையில் துணை மதிப்பீடு களை மாநில நிதியமைச்சர் தாக்கல் செய்தார். அதன் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில ளித்த அவர் ஒன்றிய அரசுக்கு வரி வருவாயாக தமிழ்நாடு ஒரு ரூபாய் கொடுக்கிறது என்றால், அதற்கு ஈடாக’ ஒன்றிய அரசிடமிருந்து திரும்ப 29பைசாமட்டுமேகிடைக்கிறது. ஆனால் பாஜக ஆளக்கூடிய உ.பி.மாநிலம் ஒரு ரூபாய் வரி செலுத்து மானால் அதற்கு ஈடாக இரண்டு ரூபாய் 73 பைசாவை திரும்பப் பெற்றுக் கொள்கிறது. இதி லிருந்தே ஒன்றிய அரசின் வரி பங்கீட்டு முறை எந்தளவிற்கு சமச்சீரற்றதாக, அநீதியானதாக பி உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஜிஎஸ்டி வரியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலங்களுக்கு ஏற்படும் இழப்பீட்டை குறிப்பிட்ட காலம் வரை ஒன்றிய அரசு ஈடு • • செய்யும் என்று கூறப்பட்டது. 2022ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் தேதியுடன் ஜிஎஸ்டி வரிக்கான இழப்பீட்டு முறை நிறுத்தப்பட்டு விட்டது. இதை மேலும் சில ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஒன்றிய அரசு ஏற்க மறுத்து விட்டது. இதனால் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் கடும் பாதிப்பை சந்திக்க வேண்டியுள்ளது.

இழப்பீட்டுத் தொகையையும் உரிய காலத்தில் முழுமையாக ஒன்றிய அரசு வழங்க “மறுத்தது. இப்போது இழப்பீடு வழங்குவதும் நிறுத் தப்பட்டு விட்டது. கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் வரை ஜிஎஸ்டி வரி இழப்பீடாக தமிழ்நாட்டிற்கு ரூ.9,603 கோடி கிடைத்திருக்க வேண்டும். ஆனால் ரூ.3,533 கோடி மட்டுமே ஒன்றிய அரசி னால் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு மட்டும் ஜிஎஸ்டி வரியால் 20 ஆயிரம் கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள் ளது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜிஎஸ்டி வரி இழப்பை சுட்டிக் காட்டினால் மாநில அரசுகள் கடன் பெற்றுக் கொள்ளுமாறு ஒன்றிய அரசு கை காட்டுகிறது. அவ்வாறு கடன் பெறுவதற்கும் மின்துறை உள்ளிட்ட அரசுத் துறைகளை தனியாருக்கு தர வேண்டும் என ஒன்றிய அரசு நிபந்தனை விதிக்கிறது.

வரிப் பகிர்வில் மட்டுமல்ல, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணியை துவங்க மறுப்பது, தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்க மறுப்பது, கீழடி போன்ற இடங்களில் ஒன்றிய அகழ்வாய்வு துறை மூலம் அகழ்வாய்வு நடத்த மறுப்பது, இந்தித் திணிப்பு என பல்வேறு வகை களில் தமிழகத்தை வஞ்சிக்கிறது ஒன்றிய பாஜக கூட்டணி அரசு. இந்த அநீதிக்கு எதிரா கக் குரல் கொடுக்க வேண்டியது தமிழக மக்கள் அனைவரது கடமையு மாகும்.

இவ்வாறு தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

### சேலம் கிழக்கு மாவட்டம்

# கெங்கவல்லி ஒன்றியம், தம்மம்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் கிழக்கு மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், தம்மம்பட்டி பேரூர்க் செயலாளர் வி.பி.ராஜா அவர்கள், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **என்.சண்முகம்,** (தம்மம்பட்டி & அஞ்சல், சேலம் மாவட்டம்.) அவர்கள், தம்மம்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.10.2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

# ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!

